**தேசிய கைப்பணிகள் மன்றம் - 2017**

----------------------------------------------------------------------

இலங்கை கைப்பணிகள் மன்றத்தின் 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளினதும் ஏனைய விளக்கத் தகவல்களினதும் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2017 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் 13(1) ஆம் பிரிவு மற்றும் 1982 இன் 35 ஆம் இலக்க தேசிய கைப்பணிகள் மன்றத்துடன் இணைந்த அதிகாரச்சட்டத்தின் 84(3) ஆம் பிரிவு என்பவற்றுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. நிதி அதிகாரச்சட்டத்தின் 14(2)(சீ) பிரிவின் பிரகாரம் மன்றத்தின் ஆண்டறிக்கையுடன் பிரசுரிக்கப்பட வேண்டும் என நான் கருதும் எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன. நிதி அதிகாரச்சட்டத்தின் 13(7)(ஏ) பிரிவின் பிரகாரம் விரிவான அறிக்கையொன்று 2018 இல் வழங்கப்பட்டது.

**1.2 நிதிக்கூற்றுக்களுக்கான முகாமைத்துவத்தின் பொறுப்பு**

----------------------------------------------------------------------

இந் நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க தயாரித்து நியாயமாகச் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

**1.3 கணக்காய்வாளரின் பொறுப்பு**

----------------------------------------------------------------------

எனது கணக்காய்வின் அடிப்படையில் இந்நிதிக்கூற்றுக்களின் மீது அபிப்பிராயம் தெரிவிப்பது எனது பொறுப்பாகும். அதியுயர் கணக்காய்வு நிறுவனங்களின் சர்வதேச நியமங்களுக்கு ஒத்ததாக (ஐஎஸ்எஸ்ஏஐ 1000-1810) இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். ஒழுக்க நெறி வேண்டுதல்களுடன் நான் இணங்கி நடப்பதனையும் நிதிக்கூற்றுக்கள் பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்றவையா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதற்கு கணக்காய்வு திட்டமிட்டு மேற்கொள்ளப்படுவதனையும் இந்நியமங்கள் வேண்டுகின்றன.

நிதிக்கூற்றுக்களிலுள்ள தொகைகளினையும் வெளிப்படுத்தல்களையும் பற்றிய கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்வதற்கான செயற்பாட்டு நடைமுறைகளில் கணக்காய்வு ஈடுபடுகின்றது. மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் மதிப்பீட்டினை உள்ளடக்கும் கணக்காய்வாளரின் தீர்மானம் மீது தெரிவு செய்யப்பட்ட நடைமுறைகள் தங்கியுள்ளது. அந்த ஆபத்தினை மதிப்பீடு செய்கையில் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைக்கும் வகையில் மன்றத்தின் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளை கணக்காய்வாளர் கருத்தில் கொள்கின்றாரேயன்றி மன்றத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் வினைத்திறனின் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல. முகாமைத்துவத்தினால் பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தமான தன்மையினையும் முகாமைத்துவத்தால் மேற்கொண்ட கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மதிப்பாய்வு செய்தல் அத்துடன் நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தலினை மதிப்பாய்வு செய்தல் என்பவற்றினையும் கணக்காய்வு உள்ளடக்கியுள்ளது. 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் 13 ஆம் பிரிவின் (3) மற்றும் (4) ஆம் உபபிரிவுகள் கணக்காய்வின் நோக்கெல்லையையும் பரப்பையும் நிர்ணயிப்பதற்கான தற்றுணிவு அதிகாரத்தினை கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு வழங்குகின்றன.

எனது கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

**1.4 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை**

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

## 2. நிதிக்கூற்றுக்கள்

### 2.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து தேசிய கைப்பணிகள் மன்றத்தின் 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றது என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 2.2 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 2.2.1 இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்கள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

**(அ) இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமம் 01**

தேவைப்படுகின்ற அல்லது அனுமதி அளிக்கப்பட்ட சந்தர்ப்பம் தவிர சொத்துக்கள், பொறுப்புகள், வருமானம் மற்றும் செலவினம் என்பன ஈடுசெய்யப்படக்கூடாத போதிலும், மீளாய்வாண்டில் பல்வேறு பயிற்சி நிகழ்ச்சிகளுக்காக பல்வேறு நிறுவனங்களிடமிருந்து வழங்கப்பட்ட ரூபா 95,000 ஆன பெறுவனவுகள் அதன் கீழ் செய்யப்பட்ட ரூபா 95,000 செலவினம் ஒன்றுக்கொன்று ஈடுசெய்யப்பட்டதால் அவ்வருமானம் மற்றும் செலவினம் கணக்குகளில் வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை.

**(ஆ) இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமம் 07**

(i) சொத்தொன்று பயன்பாட்டிற்கு தயார்படுத்தப்பட்ட நிலைமைக்கு வந்ததன் பின்னர் பெறுமானத்தேய்வு ஆரம்பிக்கப்படல் வேண்டிய போதிலும், கைப்பணி மன்றத்தினால் மீளாய்வாண்டில் தற்போது பயன்படுத்தப்படும் ரூபா 5,880,485 கூட்டுப்பெறுமதியான நிலையான சொத்துக்களுக்காக மீளாய்வாண்டில் பெறுமானத்தேய்வு செய்யப்பட்டிருக்கவில்லை.

(ii) நடைமுறை அல்லாச் சொத்துக்களின் பயன்தரு ஆயுட்காலம் வருடாந்தம் மீளாய்வு செய்யப்படாமையால் ரூபா 578,905 கிரயத்திலான காட்சிகூட பெட்டிகள் மற்றும் ஏனைய உருப்படிகள் என்பன முற்றாக பெறுமானத்தேய்வு செய்யப்பட்டிருந்த போதிலும் தொடர்ந்தும் பயன்படுத்தப்பட்டு வந்தன. அதன் பிரகாரம் மதிப்பீட்டு வழுக்களை இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமம் 3 இன் பிரகாரம் திருத்தி அமைப்பதற்காக நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

### 2.2.2 கணக்கீட்டு கொள்கைகள்

அரச மானியங்களிலிருந்து கொள்வனவு செய்யப்பட்ட ரூபா 129,087,446 பெறுமதியான நடைமுறையல்லாச் சொத்துக்கள் ஆண்டு தோறும் பெறுமானத்தேய்விடப்பட்டிருந்த போதிலும், மூலதன மானியங்களின் கணக்கீட்டிற்கு கணக்கீட்டுக் கொள்கையொன்று அறிமுகப்படுத்தப்பட்டிருக்கவில்லை.

### 2.2.3 கணக்கீட்டுக் குறைபாடுகள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) வெள்ளியுடன் இணைந்த உற்பத்தி கைவினைஞர்களுக்கு வெள்ளி கொள்வனவு செய்து வழங்குவதற்காக 2007, 2008 மற்றும் 2010 ஆம் ஆண்டுகளில் பாரம்பரிய கைத்தொழில் மற்றும் சிறு முயற்சிகள் அபிவிருத்தி அமைச்சின் மூலம் கைப்பணி மன்றத்திற்கு ரூபா 13,500,000 தொகை கிடைத்திருந்தது. நீண்டகாரல பொறுப்பொன்றான இப்பெறுமானம் நிதி நிலைமைக் கூற்றில் நடைமுறைப் பொறுப்பொன்றாக பதிவு செய்யப்பட்டிருந்தது.

(ஆ) 2016 ஆம் ஆண்டின் போது மூலதன தன்மையிலான பெறுவனவு மற்றும் கொடுப்பனவு மீணடெழும் தன்மையிலான வருமானம் மற்றும் செலவினமாக கணக்கீடு செய்யப்பட்டதை மீளாய்வாண்டின் போது சீராக்குவதற்காக பயன்படுத்தப்பட்ட நாட்குறிப்பு பதிவுகள் காரணமாக ரூபா 713,405 ஆல் மூலதன மானிய கணக்கு குறைத்தும் திரண்ட நிதியக் கணக்கு கூடுதலாகவும் காண்பிக்கப்பட்டிருந்தது.

(இ) 2015, 2016 மற்றும் 2017 ஆம் ஆண்டுகளுக்கான கணக்காய்வுக் கட்டணத்திற்காக ஒதுக்கீடு செய்யும் போது மீளாய்வாண்டின் இறுதி திகதியில் உள்ளவாறு ரூபா 1,277,328 கூட்டுத்தொகை குறைத்து கணக்காய்வுக் கட்டணத்திற்காக ஒதுக்கீடு செய்யப்பட்டிருந்தது.

(ஈ) மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறான இரண்டு நிலையான வைப்புகளுக்குரிய ரூபா 330,224 கூட்டுத்தொகையான வட்டி வருமானம் குறைத்து கணக்கீடு செய்யப்பட்டிருந்தது.

### 2.2.4 விளக்கமளிக்கப்படாத வேறுபாடுகள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) பேரேட்டுக் கணக்குகளின் படி மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு நானாவித முற்பண கணக்குகளின் மீதி ரூபா 15,136 ஆக காணப்பட்ட போதிலும், முற்பணங்களின் பட்டியலின்படி அந்த மீதி ரூபா 352,651 ஆனமையால், ரூபா 337,515 ஆன விளக்கமளிக்கப்படாத வித்தியாசமொன்று காணப்பட்டது.

(ஆ) நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறான 08 நிலையான சொத்துக் கணக்குகளுக்குரிய மீதிகள் நிலையான சொத்துக்கள் பதிவேட்டுடன் ஒப்பிட்ட போது ரூபா 51,046,580 ஆன விளக்கமளிக்கப்படாத வித்தியாசமொன்று காணப்பட்டது.

(இ) மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு தேசிய கைப்பணி மன்றத்தின் பேரேட்டுக் கணக்குகளின் படி நானாவித முற்பண கணக்குகளின் மீதி முற்பணங்களின் பட்டியலின் படியான மீதிகளுக்கு இடையே மீதி ரூபா 337,515 ஆன வித்தியாசமொன்றாக இருந்ததுடன் இவ்வேறுபாட்டை இனங்காணாமல் தொங்கல் கணக்கொன்றில் பதிவு செய்து பட்டோலையின் கூட்டுத்தொகையிலிருந்து கழித்து காண்பிக்கப்பட்டிருந்தது.

### 2.2.5 கணக்காய்விற்கான சான்றுகள் இன்மை

பின்வரும் ஒவ்வொரு விடயத்திற்கும் எதிரே சுட்டிக்காட்டப்பட்டுள்ள சான்றுகள் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்படவில்லை.

| | கணக்கு விடயம் | பெறுமதி | சமர்பிக்கப்படாத சான்றுகள் |
|---|---|---|---|
| | | ரூபா. | |
| (அ) | செயலற்ற வங்கி நடைமுறைக் கணக்கு | 172,926 | மூடப்பட்ட இரண்டு கணக்குகளுக்குரிய வங்கிக் கணக்கிணக்க கூற்று, காசேடு |
| (ஆ) | கொடுப்பனவுகள் | 386,920 | 09 உறுதிச்சீட்டுகளுக்குரிய மாதிரிப் பட்டியல் உட்பட துணை சான்றுகள் |

## 2.3 பெறவேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு ரூபா 2,597,538 தொகையான வியாபார மற்றும் ஏனைய பெறவேண்டிய மீதிகளில், 03 வருடங்களுக்கு மேற்பட்ட கடன் மீதிகளின் மொத்தம் ரூபா 2,479,538 தொகையாகக் காணப்பட்டதுடன் இந்த நிலுவைக் கடன் மீதிகளை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு ரூபா 2,020,090 தொகையான வியாபார மற்றும் ஏனைய செலுத்தவேண்டிய மொத்த மீதிகளில், 02 வருடங்கள் 03 வருடங்கள் வரையான மீதிகளின் மொத்தம் ரூபா 158,685 மற்றும் 03 வருடங்களுக்கு மேற்பட்ட கடன் மீதிகளின் மொத்தம் ரூபா 1,861,405 தொகையினை மீளாய்வாண்டிலும் தீர்வு செய்வதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

## 2.4 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடன் இணங்காமைகள்

சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடன் இணங்காமைகள் கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டன.

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் ஏனையவைகளுடனான தொடர்பு | இணங்காமைகள் |
| --- | --- |
| (அ) இலங்கை சனநாயக் சோசலிசக் குடியரசின் நிதிப் பிரமாணங்கள் | |
| (i) நிதிப்பிரமாணங்கள் 272(3) | சுகல கொடுப்பனவுகளுக்காகவும் உறுதிச்சீட்டுக்கள் சமர்ப்பிக்கப்பட வேண்டிய போதிலும் ரூபா 1,003,428 பெறுமதியான 06 கொடுப்பனவு உறுதிச்சீட்டுக்கள் கணக்காய்விற்காக சமர்ப்பட்டிருக்கவில்லை. |
| (ஆ) 2015 யூலை 14 ஆந் திகதிய 03/2015 ஆம் இலக்க நிதி அமைச்சின் சுற்றறிக்கை | முற்பணத்தை தீர்வுசெய்தல் வழங்கப்பட்ட நிதியாண்டின் திசெம்பர் 31 ஆந் திகதிக்கு மேற்படாமல் தாமதிக்கக்கூடாத போதிலும் 2000 தொடக்கம் 2016 வரையான 08 ஆண்டுகளின் போது வழங்கப்பட்ட ரூபா 258,651 கூட்டுத்தொகையான கட்டுநிதி மீளாய்வாண்டின் இறுதி திகதி வரையில் தீர்வு செய்யப்பட்டிருக்கவில்லை. |

## 3. நிதிசார் மீளாய்வு

### 3.1 நிதிசார் விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம், மீளாய்வாண்டிற்கான நிதி விளைவுகள் ரூபா 5,336,897 ஆன பற்றாக்குறையாக இருந்ததுடன் அதனோடொத்த முன்னைய ஆண்டின் பற்றாக்குறை ரூபா 2,122,880 ஆக இருந்தமையால் முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும் போது மீளாய்வாண்டின் நிதி விளைவுகளில் ரூபா 3,214,017 ஆன வீழ்ச்சியொன்றாக இருந்தது. அதற்காக மன்றத்தின் மொத்த வருமானம் 2016 ஆம் ஆண்டிற்கு ஒப்பாக ரூபா 693,369 ஆல் குறைவடைந்திருந்தமை, மொத்தச் செலவினம் ரூபா 2,520,649 ஆல் அதிகரித்தமையும் பிரதான காரணங்களாக இருந்தன.

மீளாய்வாண்டினதும் முன்னைய 04 ஆண்டுகளினதும் நிதி விளைவுகளை பகுப்பாய்வு செய்யும் போது 2013 ஆம் ஆண்டிலிருந்து 2017 ஆம் ஆண்டு வரை தொடர்ச்சியாக நிதி பற்றாக்குறைகள் ஏற்பட்டிருந்தன. எவ்வாறாயினும், ஊழியர் ஊதியம், நடைமுறையல்லாச் சொத்துக்களுக்கான பெறுமானத்தேய்வு என்பவற்றைக் கவனத்தில் கொள்ளும் போது, மன்றத்தின் பங்களிப்பு 2013 ஆம் ஆண்டின் போது ரூபா 59,668,591 ஆகக் காணப்பட்டதுடன் அது தொடர்ந்து 2016 ஆம் ஆண்டளவில் ரூபா 134,641,678 வரை அதிகரித்து மீளாய்வாண்டின் போது ரூபா 127,185,816 வரை குறைவடைந்திருந்தது.

### 3.2 பகுப்பாய்வு ரீதியான மீளாய்வு

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) கைப்பணி பேரவைகள் கடந்த 03 ஆண்டுகளில் நடைமுறைச் சொத்து விகிதத்தை பரீட்சித்த போது 2015 ஆம் ஆண்டின் போது 1.85 ஆன நடைமுறை விகிதம் 2016 ஆம் ஆண்டளவில் 2.24 வரை அதிகரித்திருந்ததுடன் இவ்விகிதம் மீளாய்வாண்டின் போது 2.39 ஆக இருந்தது. மீளாய்வாண்டின் நடைமுறை சொத்துக்கள் குறைவடையும் சதவீதத்தை விட கூடுதலான சதவீதத்தில் நடைமுறை பொறுப்புக்கள் குறைவடைந்த இவ்வேறுபாட்டிற்கு காரணங்களாக இருந்தமை இதற்காக 2016 ஆம் ஆண்டின் போது ரூபா 2,597,538 வரை குறைவடைந்தமை மீளாய்வாண்டில் இறுதி வரையில் நடைமுறை பொறுப்புக்கள் ரூபா 2,125,290 ஆம் குறைவடைய காரணமாக இருந்தது.

(ஆ) விரைவு சொத்து விகிதம் 2016 ஆம் ஆண்டின் போது 1.36 உம் 2012 ஆம் ஆண்டளவில் 1.44 வரை இறுதியளவில் குறைவடைந்திருந்தது. இவ்விகிதத்தில் மேம்பாட்டிற்கான நடைமுறை சொத்துக்களில் உள்ளடக்கப்பட்ட இறுதி இருப்பு முன்னைய ஆண்டிற்கு ஒப்பாக மீளாய்வாண்டின்போது ரூபா 600,837 ஆல் குறைவடைந்தமை பிரதான காரணமாக இருந்தது.

## 4. செயற்பாட்டு மீளாய்வு

---

### 4.1 செயற்பாடு மற்றும் மீய்வு

---

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) முன்னைய ஐந்து வருட காலத்தின் போது மன்றத்தினால் கைவினைஞர்களுக்காக நடாத்தப்பட்ட பல்வேறு பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்கள் மற்றும் பயிற்சியளிக்கப்பட்டவர்களின் எண்ணிக்கையுடன் ஒப்பீடு செய்கையில், 2013 மற்றும் 2014 ஆம் ஆண்டுகளில் அந்த எண்ணிக்கை கிரமமாக அதிகரித்திருந்த போதிலும், 2015 ஆம் ஆண்டில் அந்த எண்ணிக்கையில் குறைவொன்று தென்பட்டது. 2016 ஆம் ஆண்டுடன் ஒப்பிடுகையில், 2017 ஆம் ஆண்டில் பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்களின் எண்ணிக்கை 13 ஆலும் அதாவது 12 சதவீதத்தினாலும் பயிற்சியளிக்கப்பட்டவர்களின் எண்ணிக்கை 235 ஆலும் அதாவது 16 சதவீதத்தினாலும் வீழ்ச்சியடைந்தன

(ஆ) இந்திய தூதுவராலயத்தின் ரூபா 23,000,000 நிதிஏற்பாட்டின் கீழ் யாழ்ப்பாணத்தில் தோல் பொருள் கைத்தொழில் உற்பத்தி மற்றும் விற்பனைக் கிராமமொன்றை தாபிப்பதற்கு செயல்நடவடிக்கைத் திட்டத்தின் பிரகாரம் திட்டமிடப்பட்டிருந்த போதிலும் இந்திய தூதுவராலயத்தினாலே நிதி ஏற்பாடு வழங்கப்படும் அம்பாந்தோட்டை காவன்திஸ்ஸபுரவ விற்பனை கிராமத்தின் நிர்மாண வேலைகள் பூர்த்தி செய்யப்படாமையால் யாழ்ப்பாணத்தில் தோல் பொருள் கைத்தொழில் கிராமத்தின் நிர்மாண நடவடிக்கைகளுக்காக நிதி ஏற்பாடு கிடைத்திருக்கவில்லை.

(இ) மீளாய்வாண்டில் 25 மாவட்ட கைப்பணி சபைகளை தாபிப்பதற்கும் அம்பாந்தோட்டை காவன்திஸ்ஸபுர தோல் பொருள் கைத்தொழில் உற்பத்தி மற்றும் விற்பனைக் கிராமத்தின் II ஆம் கட்டத்தின் சகல நிர்மாண வேலைகளையும் பூர்த்தி செய்வதற்கு 2017 செயல்நடவடிக்கைத் திட்டத்தின் பிரகாரம் இலக்கிடப்பட்டிருந்தது. எனினும் ஆண்டினுள் மாவட்ட கைப்பணி சபைகளை நிறுவும் செயற்பாடு பூர்த்தி செய்யப்படாதிருந்ததுடன் தோல் பொருள் கைத்தொழில் உற்பத்தி மற்றும் விற்பனைக் கிராமத்தின் நிர்மாண நடவடிக்கைகளும் பூர்த்தி செய்யப்பட்டிருக்கவில்லை.

(ஈ) செயல்நடவடிக்கைத் திட்டத்தின் பிரகாரம் மீளாய்வாண்டில் 06 உள்நாட்டு வியாபார நிலையங்கள் மற்றும் கண்காட்சிகளை நடாத்துவதற்கு திட்டமிடப்பட்டிருந்த போதிலும் செயலாற்றல் அறிக்கை மற்றும் உள்ளவாறான செயற்பாட்டின் பிரகாரம் 03 வியாபார நிலையங்கள் மற்றும் கண்காட்சிகள் மாத்திரம் நடாத்தப்பட்டிருந்தமையால் அடையக்கூடிய பௌதீக முன்னேற்றம் செயல்நடவடிக்கைத் திட்டத்தின் 50 சதவீதமான மட்டத்தில் காணப்பட்டது.

(உ) 2017 ஆம் ஆண்டில் கைப்பணிச் சங்கங்களை தாபிப்பதற்கும் சங்கங்களை மீளமைப்பதன் கீழும் 50 சங்கங்களை தாபிப்பதற்கும் மீளமைப்பதற்கும் இலக்கிடப்பட்டிருந்த போதிலும் ஆண்டில் 28 சங்கங்களின் செயற்பாடுகள் மாத்திரம் நிறைவேற்றப்பட்டமையால் அடையப்பெற்ற பௌதீக முன்னேற்றம் 56 சதவீத மட்டத்தில் காணப்பட்டது.

(ஊ) செயலாற்றல் அறிக்கையின் பிரகாரம் நாற்றுக்கள் வளர்த்தலின் பௌதீக முன்னேற்றம் 4000 நாற்றுக்களாக குறிப்பிடப்பட்டிருந்த போதிலும் செயல் நடவடிக்கைத் திட்டத்தில் நாற்றுக்கள் வளர்த்தல் இலக்கு குறிப்பிடப்பட்டிருக்கவில்லை.

## 4.2 முகாமைத்துவ செயற்பாடுகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) கிராம அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் 06 கிராமங்களுக்காக பகிர்ந்தளிப்பதற்கு மீளாய்வாண்டின் திசெம்பர் மாதத்தின் போது ரூபா 8,373,920 பெறுமதியான தையல் இயந்திரங்கள், மின் உபகரணங்கள் மற்றும் உபகரணங்கள் கொள்வனவு செய்யப்பட்டிருந்த போதிலும் கணக்காய்வு திகதியான 2018 ஏப்ரல் வரை அப்பொருட்கள் மற்றும் உபகரணங்கள் கைவினைஞர்களுக்கு பகிர்ந்தளிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) 2009 சனவரி 08 ஆம் திகதிய அமப/08/2322/349/015 ஆம் இலக்க அமைச்சரவை தீர்மானத்தின் பிரகாரம் இலங்கை கைப்பணி சபையின் கீழ் நாடு பூராகவும் அமைந்துள்ள தேசிய கைப்பணி மன்றத்திற்கு கையேற்கக் கூடிய 86 கைப்பணியாளர் பயிற்சி நிலையங்கள் மற்றும் அதன் சொத்துக்கள் மன்றத்திற்கு கையளிக்கப்பட்டிருந்த போதிலும் அந்நிலையங்களிலிருந்து 85 நிலையங்களின் காணி மற்றும் கட்டிடங்கள் என்பவற்றை சட்டரீதியாக கைப்பணி மன்றத்திற்கு கையேற்கப்பட்டு கணக்கு வைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(இ) கைப்பணி அபிமானி – 2017 மற்றும் சர்வதேச கைப்பணி விழா – 2017 இற்கான நினைவுச் சின்னங்கள் கொள்வனவின் போது தேவைப்பாட்டை சரியாக இனங்கண்டு நினைவுச் சின்னங்களை கொள்வனவு செய்யாமையால் மீளாய்வாண்டின் இறுதியில் உள்ளவாறு ரூபா 49,500 பெறுமதியான 19 நினைவுச் சின்னங்கள் கூடுதலாக கொள்வனவு செய்யப்பட்டிருந்தன.

(ஈ) வரிசை அமைச்சின் மூலம் முயற்சியாளர் கிராம அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் மீளாய்வாண்டில் ரூபா 16,118,325 கூட்டுத்தொகை கிடைக்கப்பெற்றிருந்ததுடன் அதற்காக ரூபா 16,766,788 தொகை செலவிடப்பட்டிருந்தமையால் ரூபா 648,463 தொகை பெறுவனவை விஞ்சி செலவு செய்யப்பட்டிருந்தது.

(உ) கைப்பணி மன்றத்தின் தலைமை அலுவலகம் நிர்மாணிக்கப்பட்டுள்ள ரோஹினா மாவத்தையில் அமைந்துள்ள 02 ரூட் 1.58 பேர்ச் அளவிலான காணி 1990 ஒக்தோபர் 16 ஆந் திகதிய 140 ஆம் இலக்க குத்தகை உறுதி மூலம் கைப்பணி சபைக்கு உரித்தாகியிருந்தது. இக் காணியின் எல்லை தொடர்பான சர்ச்சைக்குரிய நிலைமையொன்று ஏற்பட்டிருந்த போதிலும் மீளாய்வாண்டிலும் அது சீராக்கப்பட்டிருக்கவில்லை.

## 4.3 சர்ச்சைக்குரிய கொடுக்கல் வாங்கல்கள்

வருடக் கணக்காக செயலற்று காணப்படும் இரண்டு வங்கி நடைமுறைக் கணக்குகளை மீளாய்வாண்டின் போது மூடப்படும் போது அவ்விரண்டு வங்கிக் கணக்குகளின் தேறிய மீதியாக ரூபா 116,804 ஆன பற்றாக்குறையொன்று முன்னைய ஆண்டின் இலாபத்திற்கு எதிராக பதிவழிக்கப்பட்டிருந்ததுடன் பணக் கணக்கின் மீதிகள் செலவினமொன்றாக குறைத்துக் காண்பிக்கப்பட்டிருந்தது.

## 4.4 விளைவற்ற மற்றும் குறைப்பயன்பாடுடைய சொத்துக்கள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) தேசிய கைப்பணிகள் மன்றத்தினால் நிர்வகிக்கப்படுகின்ற சீகிரியா கைப்பணிகள் கிராமத்தின் 03 கட்டிடங்கள் மற்றும் 11 விற்பனைக் கூடாரங்கள், மூன்று வருடங்களுக்கு மேற்பட்ட காலமாக பயன்பாட்டிற்கு எடுக்கப்படாது தொடர்ந்தும் விளைவற்றுக் காணப்பட்டன.

(ஆ) வெள்ளியுடன் இணைந்த உற்பத்தி கைத்தொழிலில் ஈடுபட்டுள்ள கைவினைஞர்களுக்கு பொருட்கள் உற்பத்தி செய்யும் போது பயன்படுத்துவதற்காக வழங்குவதற்கு 2007 - 2010 காலப்பகுதியில் அமைச்சின் ஏற்பாடுகளிலிருந்து ரூபா 13,218,660 கூட்டுப் பெறுமதியான 97.92 கிலோகிராம் வெள்ளி கைவினைஞர்களுக்கு விற்பனை செய்ய முடியாமல் 07 வருடங்களுக்கு மேற்பட்ட காலமாக விளைவற்றுக் காணப்பட்டன.

(இ) கிராமிய பொருளாதார விவகாரங்கள் அமைச்சினால் 2015 யூன் 03 ஆந் திகதி கைப்பணிகள் மன்றத்திற்கு வழங்கப்பட்ட 05 வாகனங்கள் ஓட்டத்திற்கு பொருத்தமற்றதாக காணப்பட்டதால் 2017 திசெம்பர் 31 ஆ் திகதி வரை தலைமை அலுவலகத்தின் வளவில் பாதுகாப்பு இல்லாமலும் விளைவற்றும் காணப்பட்டன.

## 4.5 பதவியணியினர் நிர்வாகம்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) கைப்பணிகள் மன்றத்தின் அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினர் 262 ஆக இருந்த போதிலும் உண்மையான பதவியணியினர் 230 ஆகக் காணப்பட்டமையால் சிரேஷ்ட நிலையில் 05 பதவிகளும், இரண்டாம் நிலையில் 38 உம் மற்றும் மூன்றாம் நிலையில் 01 உம் வெற்றிடங்களாகக் காணப்பட்டதுடன், ஆரம்ப நிலையின் அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினர் 21 ஆகக் காணப்பட்ட போதிலும் உண்மையான பதவியணியினர் 27 ஆகக் காணப்பட்டமையினால் 06 ஊழியர்களின் மிகையொன்றினைக் கொண்டுள்ளது.

எவ்வாறாயினும் பதவியணியினரின் பற்றாக்குறை மீளாய்வாண்டின் இறுதி திகதியில் உள்ளவாறு தீர்வுசெய்வதற்கு செயற்படாமை காரணமாக மன்றத்தின் கடமைகளை துரிதமாக நிறைவேற்றுவதில் தாமதங்கள் அவதானிக்கப்பட்டது. 2018 ஆம் ஆண்டளவில் வெற்றிடங்களுக்காக ஊழியர்களை ஆட்சேர்ப்பு செய்வதற்கு நடவடிக்கை எடுத்துவருவதாக அவதானிக்கப்பட்டது.

(ஆ) கணக்குகள் மற்றும் கொள்வனவு உத்தியோகத்தர் பதவியில் சேவையாற்றிய உத்தியோகத்தர் 2014 பெப்ரவரி மாதத்தில் சேவையிலிருந்து இராஜினமாச் செய்திருந்த போதிலும், அந்தப் பதவிக்காக நிரந்தர உத்தியோகத்தர் ஒருவரை ஆட்சேர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

## 5. நிலைபேறான அபிவிருத்தி

## 5.1 நிலைபேறான அபிவிருத்தி நோக்கங்களை அடைந்து கொள்ளல்

நிலைபேறான அபிவிருத்தி தொடர்பான ஐக்கிய நாடுகளின் 2030 ஆண்டு ‘‘நிகழ்ச்சி நிரல்’’ பிரகாரம் ஒவ்வொரு அரச நிறுவனத்தினாலும் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டியிருப்பதுடன் மீளாய்வாண்டிற்குரித்தாக கைப்பணி மன்றத்தினால் தனது விடயப்பரப்பின் கீழ் எடுக்கப்படும் செயற்பாடுகள் தொடர்பாக தெரிந்து வைத்திருந்தது. இது தொடர்பாக பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) தேசிய கைப்பணி மன்றம் 2017 ஆம் ஆண்டின் போது நிரந்தர அபிவிருத்தியை அடைந்து கொள்வதற்கு ''வறுமையை ஒழித்தல்'' என்ற நோக்கத்தை தெரிவு செய்திருந்தது. அதன் பிரகாரம் அந்நோக்கங்களை அடைந்து கொள்வதற்கு இலக்குகள் மற்றும் குறிகாட்டிகள் இனங்காணப்பட்டிருந்த போதிலும் மீளாய்வாண்டின் செயல்நடவடிக்கைத் திட்டத்தில் தெளிவாக நிலைபேறான அபிவிருத்தி நோக்கங்கள் மற்றும் இலக்குகள் அடைந்துகொள்வதற்காக நிதி ஏற்பாடு, மனித வளங்கள் மற்றும் பௌதீக வளங்கள் இனங்காணப்பட்டிருக்கவில்லை.

(ஆ) கைப்பணிகள் மன்ற உருவாக்கல் சட்டத்தின் பிரகாரம் நிறைவேற்றப்பட வேண்டிய றோக்கங்கள் மற்றும் இலக்குகளுக்குரிய தொடர்ச்சியாக மேற்கொள்ளப்பட வேண்டிய கடமைகள் மீளாய்வாண்டில் செயல்நடவடிக்கைத் திட்டத்தில் உள்ளடக்கப்பட்டிருந்ததுடன் அக்கடமைகள் நிலைபேறான அபிவிருத்தி நோக்கங்களாக அடைந்து கொள்வதற்கு அடிப்படையாகக் கொண்ட இலக்குகள் மற்றும் குறிக்காட்டிகளாக கணக்காய்விற்கு அறிக்கையிடப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் நிலைபேறான அபிவிருத்தி நோக்கங்களை அடைந்து கொள்வதற்காக விஷேட கவனம் செலுத்தப்பட்டிருக்கவில்லை.

## 6. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

### 6.1 பாதீட்டுக் கட்டுப்பாடு

மீளாய்வாண்டில் 07 மீண்டெழும் செலவின விடயங்களில் நிதிஏற்பாடுகளை விஞ்சி செலவிடப்பட்ட உள்ளவாறான செலவினங்களில் 47.7 சதவீதத்திலிருந்து 80.4 வரை விலகல்கள் காணப்பட்டதுடன், அபிவிருத்தி செலவின விடயங்களுக்காக செலவிடப்பட்ட 03 செலவின விடயங்களில் நிதிஏற்பாட்டை மிகைத்து செலவிடப்பட்ட உள்ளவாறன செலவினங்களில் 32 சதவீதம் முதல் 67.6 வரையான வீச்சில் விலகல் காணப்பட்டது. . அதன் காரணமாக பாதீடு ஆக்கபூர்வமான நிதிக்கட்டுப்பாட்டுக் கருவியொன்றாக பயன்படுத்தப்படாதிருந்தமை அவதானிக்கப்பட்டது.

### 6.2 தீர்க்கப்படாதுள்ள கணக்காய்வு பந்திகள்

2012 ஆம் ஆண்டில் கைப்பணிகள் மன்றத்தின் கைப்பணிகள் கிராம வளாகத்திற்கு நுழைவதற்காக ரூபா 1,274,649 செலவு செய்து நிர்மாணிக்கப்பட்டிருந்த மரத்திலான பாலம் திறந்து வைப்பதற்கு முன்னரே மற்றுமொரு அபிவிருத்தி நோக்கத்திற்கு உடைத்து அகற்றப்பட்டிருந்தது. இந்த சொத்தினை கணக்கு புத்தகங்களிலிருந்து பதிவழிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

## 7. முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள்

கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்ட முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகளிலுள்ள குறைபாடுகள் அவ்வப்போது மன்றத்தின் தலைவரின் கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டிருந்தன. பின்வரும் கட்டுப்பாட்டுத் துறைகள் தொடர்பாக விசேட கவனம் கோரப்படுகின்றது.

| **முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டு பரப்புகள்** | **அவதானிப்புகள்** |
| --- | --- |
| (அ) நிதிக் கட்டுப்பாடு | பெறவேண்டிய மீதிகள் அறவிடப்படாமை, வங்கி கணக்கிணக்கக் கூற்றுக்களில் தீர்வு செய்யப்படாத மீதிகள் காணப்படல். |
| (ஆ) நிலையான சொத்துக்கள் கட்டுப்பாடு | சொத்துக்கள் பதிவேடுகள் முறையாகப் பேணப்படாமை, கைவினைஞர்கள் பயிற்சி நிலையங்களின் சொத்துக்களை கையேற்காமை மற்றும் மதிப்பாய்வினை நடாத்துவதில் தாமதங்கள் |
| (இ) களஞ்சியங்களின் கட்டுப்பாடு | களஞ்சிய மூலப்பொருட்கள் மற்றும் காட்சிபடுத்தப்பட்ட பொருள் இருப்புக் கட்டுப்பாட்டினை நாளதுவரையாக்காமை. |
| (ஈ) கடன்பட்டோர் மற்றும் கடன் கொடுத்தோர் கட்டுப்பாடு | வருமதியாகவுள்ள கடன் மீதிகளினை அறவிடாமை மற்றும் செலுத்த வேண்டிய மீதிகளினை செலுத்துவதற்கு நடவடிக்கை எடுக்காமை. |